## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II தரத்தின் வெற்றிடங்களுக்காக 3 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களைப் பதவி உயர்த்துதல்

கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களில் காணப்படும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II தரத்தின் வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்காக இலக்கம் 1892 மற்றும் 2014.12.05 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II தரத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு வெற்றிடங்கள் காணப்படுவதுடன் நேர்முகப் பரீட்சையின்போது அவ்வெற்றிடங்கள் ஏற்பட்ட தினத்தை அடிப்படையாகக் கொண்டு தகைமைகளைப் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் :

| திகதி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| 2013.01.01 | 39 |
| 2013.07.01 | 03 |
| 2014.01.01 | 05 |
| 2014.07.01 | 05 |

2014.12.05 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்க முடியாதுபோன மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களுக்கு இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II தரத்திற்குப் பதவியுயர்த்துவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் இருப்பின் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப் பத்தை 2015.06.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II தரத்தின் வெற்றிடங்களுக்காக 3 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களை பதவி உயர்த்துதல்" எனக் குறிப்பிட வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

உபாலி மாரசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2015, மே 8.

5-613

---

## திருத்தம்

### கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இற்கு சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை – 2015

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இற்கு சேர்த்துக் கொள்வதற்காக 2015.04.10 ஆந் திகதிய 1910 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரும் அறிவுறுத்தலுக்கு ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2015.05.29 திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

2015.04.10 ஆந் திகதிய 1910 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாவதுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளும் 2015.01.01 திகதிக்கு பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

உபாலி மாரசிங்க
செயலாளர்,
கல்வி அமைச்சு.

'இசுருபாய',
பத்தரமுல்ல,
2015, மே 13.

5-714